அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. / RLTOP: 2/2024

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.V.நாகேஸ்வரி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு ஜனவரி திங்கள் 08-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

ம.சா.1 08.01.2025

பெயர் முகமது முபாரக் தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>முதல் விசாரணை</u>:- நான் இவ்வழக்கின் மனுதாரர் ஆவேன். எனது பக்க முதல் விசாரணையை நிருபண பிரமாண பத்திரிக்கையாக தாக்கல் செய்கின்றேன்.

1. 15.06.2017 தேதியிட்ட வாடகை ஒப்பந்தம் அசல் (கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணம் வழக்கின் மனுஉடன் தாக்கல் செய்வில்லை ஆகவே கூடுதல் ஆவணம் பெறுவதற்கான உரிய மனுதாக்கல் செய்து தான் குறியீடு செய்யஇயலும் என்று ஆட்சேபணை தெரிவித்தார். மேற்படி ஆட்சேபணை சம்மந்தமாக இந்நீதிமன்றம் மனு மற்றும் பதில் உரையில் பரிசீலித்துப்பார்த்தது. மனுவில் மேற்சொன்ன வாடகை ஒப்பந்தம் பற்றி குறிப்பாக சொல்லப்பட்டுள்ளது அதனை எந்த

விதத்திலும் எதிர்மனுதாரர் தனது பதில் உரையில் குறிப்பிட்டு மறுப்பு தெரிவிக்க வில்லை. மேலும் புதிய வாடகை சட்டத்தின் படி இந்த வழக்கானது சம்மரி செயல்முறை ஆகவே இந்த வாடகை ஒப்பந்தத்தை குறியீடு சம்மந்தமான ஆட்சேபணை நிராகரிக்கப்படுகிறது.) அந்த ஒப்பந்தம் ம.சா.ஆ 1

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)